# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2041 (ஆவணி-புரட்டாசி) செப்டம்பர் 2010 ஏர்-25, உழவு-9, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பி.சென்னியப்பன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : BRT.சென்னியப்பன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன் கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | செல்வி ஃபீட்ஸ் கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| செயலாளர் அறிக்கை | - 3 |
| வாழ்த்துகிறோம் | - 5 |
| வாழ்த்து செய்தி | - 6 |
| வெற்றிக்குப் பின்னால் | - 8 |
| விருதுகள் வழங்கப்படுகின்றன | - 12 |
| வாழ்த்துகிறோம் | - 13 |
| நினைவு நாள் | - 15 |
| குழந்தைகள் விழா | - 17 |
| விவசாயிகள் சங்கம் | - 19 |
| திருமணமாலை | - 24 |
| விளையாட்டு விழா | - 25 |
| குழந்தைகள் விழா | - 28 |
| மணமகள் தேவை | - 30 |
| மணமகன் தேவை | - 32 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



8-8-2010 அன்று நடைபெற்ற விளையாட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த சொந்தங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய வரவாக பலரும் கலந்துகொண்டது மகிழ்ச்சியளிக்கிறது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் போட்டிகளில் கலந்து கொண்டு உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற உங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நம் குடும்ப நிகழ்வுகளிலெல்லாம் கலந்து கொள்ளாமல், பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்கவில்லை அல்லது மகனுக்குப் பெண் கிடைக்கவில்லை என்று வருத்தப்படுவதில் அர்த்தமில்லை. நமது சமுதாயத்தில் தேவையான மணமகன், மணமகள் இருக்கிறார்கள், ஆனால் நாம் ஒருவரோடு ஒருவர் பழகாததுதான் திருமணம் தள்ளிப் போவதற்குக் காரணம். என்னுடைய சங்க அனுபவத்தில், சங்க நிகழ்ச்சிகளில் ஈடுபாடுகொண்டு உறுப்பினர்களோடு தொடர்பில் இருப்பவர்கள் வீட்டுத்திருமணங்கள் தள்ளிப்போவது கிடையாது. திருமணத்திற்கு மட்டுமல்ல, பல வகைகளில் உபயோகமாக இருக்கின்ற கொங்கு நண்பர்கள் சங்க உறவுகளோடு தொடர்பில் இருங்கள்.

என் தலைமையில் இருக்கின்ற இந்தச் செயற்குழு இரண்டாண்டுகால பணியை நிறைவு செய்கின்ற மாதம். புதிய தீரன் சின்னமலை மாளிகைக்கு பட்ட கடனை தீர்க்கவேண்டிய கடமை புதிதாகப் பொறுப்பேற்கப் போகின்ற செயற்குழுவிற்கு இருக்கிறது. சங்கத்தின் கடனை அடைத்து சங்க வளர்ச்சியில் வேகத்தைக் கொடுக்க புதியவர்களை வரவேற்கிறேன். தயங்காமல் வாருங்கள். எனக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்து, சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது மட்டுமல்ல, சங்கத்தின் பெருமையைக் கொங்கு நாடு முழுவதும் போற்றுகின்ற அளவுக்கு நடந்துகொண்ட செயற்குழுவிற்கு என் நன்றியை சமர்ப்பிக்கிறேன். தம்பி KRP மோகன் தலைமையில் சந்தோஷமாகப் பொறுப்பேற்ற இந்தச் செயற்குழு பல சவால்களைச் சந்தித்து முன்னேறினாலும் கே.ஆர்.பி.மோகனின் இழப்பை மட்டும் இன்னும் ஈடுகட்ட முடியாமல் தற்போது புதிய செயற்குழுவிடம் பொறுப்புகளை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறது.

கே.ஆர்.பி.மோகன் இருந்த போதும், மறைவிற்குப் பிறகும் சங்கப் பணிகைள முழுமையாக தங்கள் தோளிலே சுமந்த பரணி பாலுவுக்கும், பொருளாளர் செல்வராஜிக்கும் தனிப்பட்ட பாராட்டையும், நன்றியையும் சங்கச் செயற்குழுவின் சார்பில் தொரித்துக்கொள்கிறேன். இந்த மாத இறுதியில் பொறுப்பேற்க இருக்கின்ற புதிய செயற்குழுவிற்கு என் வாழ்த்துக்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சங்கச் செயல்பாட்டிற்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்தற்கும், எனக்கும், செயற்குழுவிற்கும் உங்களுக்குப் பணிபுரிய வாய்ப்பு கொடுத்ததற்கும் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் என்சார்பிலும், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழுவின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி ! நன்றி !! நன்றி !!!

பி.சென்னியப்பன்
தலைவர்

❖❖❖❖❖

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர்,



வணக்கம், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 01-08-2010 வெள்ளிவிழா இல்லத்தில் நடத்திய பல்வேறு போட்டிகளிலும், 8-8-2010 அன்று இராயப்பேட்டை வெஸ்லி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளிலும், அதற்குபின் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிலும் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். போட்டிகளில் வெற்றிபெற்று பரிசுகள் பெற்ற குழந்தைகள் மற்றும் மகளிருக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் செயற்குழுவின் பதிவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது. 26-9-2010 அன்று வெள்ளிவிழா இல்லத்தில் பொதுக்குழு கூட்டமும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலும் நடைபெற உள்ளது. சங்கத்தின் 2009-2010 ஆண்டறிக்கை தங்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

செயலாளர் என்ற முறையில் என்னால் இயன்ற அளவு சங்கத்திற்காக உழைத்து வருகிறேன். தீரன் சின்னமலை மாளிகை கட்டப்பட்டு திறப்புவிழா கண்டது சங்க வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். தீரன் சின்னமலையின் புகழை எப்போதும் மணக்கச்செய்வதோடு, கொங்குச் சொந்தங்களுக்குப் பெரிதும் பயன்படும் வண்ணம் உருவாகியுள்ள இம்மாளிகையைக் கட்டும் பொறுப்பை எனக்குக் கொடுத்த சங்க நிர்வாகிகளுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் கொங்கு சமுதாயத்திற்கு தொண்டாற்றக் கூடிய அரிய வாய்ப்பினை நான் இதன் மூலம் பெற்றேன் என்பதுதான்.

சங்கத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து பாராட்டு தெரிவித்த அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பாராட்டுகளே சங்கத்திற்கு மேலும் கடுமையாக உழைக்கவும், சமுதாயத் தொண்டு புரியவும் எனக்குத் தூண்டுகோள்களாக உள்ளன என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நன்றி !

பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 59,76,683 |
| 1057 | | R.ராமசாமி | 25,000 |
| 1058 | 2599 | ராஜேந்திரன் | 2,000 |
| 1059 | 730 | K.பாலசுப்பிரமணி | 2,000 |
| 1060 | 2411 | N.M.ஆறுமுகம் | 2,000 |
| 1061 | 2639 | குணசேகரன் | 1,001 |
| 1062 | 2640 | கருப்பசாமி | 1,001 |
| 1063 | | M.வெங்கடாசலம் | 1,000 |
| 1064 | | D.சரண்யா L.H. | 1,000 |
| 1065 | | N.தர்ஷிணி | 1,000 |
| 1066 | | K.ராமசாமி | 1,000 |
| 1067 | | K.K.கந்தசாமி | 1,000 |
| 1068 | | K.N.சாமியப்பன் | 1,000 |
| 1069 | | K.சண்முகம் | 1,000 |
| 1070 | | S.கோபாலசாமி | 1,000 |
| 1071 | | P.R.சண்முகம் | 1,000 |
| 1072 | | K.முத்துசாமி | 1,000 |
| 1073 | | S.அர்ஜீன் G.H. | 1,000 |
| 1074 | | K.சுமதி L.H. | 1,000 |
| 1075 | | M.சிந்துஜா L.H | 1,000 |
| 1076 | 95 | P.மயில்சாமி | 1,000 |
| 1077 | 1524 | V.விஜயகுமார் | 1,000 |
| 1078 | | சங்கர் G.H | 1,000 |
| 1079 | | S.தீபன்சங்கர் G.H. | 1,000 |
| 1080 | | P.காவேரிநாதன் G.H. | 1,000 |
| 1081 | | K.பகவதிஜீவிதா L.H. | 1,000 |
| 1082 | 2822 | J.G.அர்ஜீன்ராஜா | 1,000 |
| 1083 | | K.நடராஜன் | 1,000 |
| 1084 | | K.S.அனிதா ஸ்ரீ L.H. | 1,000 |
| 1085 | | A.சத்யா L.H. | 1,000 |
| 1086 | 1354 | P.சிவகாமி | 1,000 |
| 1087 | | K.P.கலைப்பிரியா L.H. | 1,000 |
| 1088 | | N.நந்தினி L.H. | 1,000 |
| 1089 | | N.ராஜேந்திரன் | 1,000 |
| 1090 | | K.P.சிதம்பரம் | 1,000 |
| 1091 | | K.K.சண்முகம் | 1,000 |
| 1092 | 1496 | S.குப்புசாமி | 1,000 |
| 1093 | | C.கோகுல்ராஜா G.H. | 1,000 |
| 1094 | 0113 | S.நித்யபிரகாஷ் | 1,000 |
| 1095 | | பிரேமா L.H. | 1,000 |
| 1096 | | D.கவுசிகா L.H. | 1,000 |
| 1097 | 2908 | N.கோபாலசாமி | 1,000 |
| 1098 | | சரண்யா L.H. | 1,000 |
| | | | 60,45,683 |

# வாழ்த்துகிறோம்



திரு.ஆர்.செல்வராஜ் அவர்கள் 1961 ஆம் வருடம் நாமக்கல் மாவட்டத்தில் திரு. என்.ரவீந்திரன் – திருமதி ராஜம்மாள் தம்பதியினருக்கு மூத்தமகனாய் பிறந்தார். இவருடைய தந்தையார் வேலை நிமித்தமாக 1963 முதல் சென்னையிலேயே குடியமர்ந்துவிட்டதால் இவரும் தன்னுடைய பள்ளிப் படிப்பு முதல் சென்னையிலேயே முடித்து, பொறியியல் படிப்பினை 1983 ஆம் ஆண்டு சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் முடித்தார். கல்லூரி காலங்களிலேயே மாணவர் சங்க நிர்வாகியாக பதவியேற்று உள்ளார்.

கடந்த 1985 ஆம் ஆண்டு சேலம் நீலா டிரான்ஸ்போர்ட்ஸ் நிறுவனர் திரு. கருப்பையா அவர்களின் புதல்வி கோமதி அவர்களை திருமணம் செய்து கொண்டு, சென்னையிலேயே 1985 ஆம் ஆண்டு Barlax Paints என்ற நிறுவனத்தை த் துவங்கி, கடந்த 25 வருடங்களாக சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறார்.

இவர் 1990 ல் திரு. எஸ்.அருணாச்சலம், Sengoda Gounder & Suns அவர்கள் மூலமாக, அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு, அவராலேயே 1994 ஆம் ஆண்டு நிர்வாகக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், அதுமுதல் அம்பத்தூர் தொழிற்பேட்டை சங்கத்தின் பல பொறுப்புகளை வகித்து வந்தார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தொழில் நுட்பமையத்தின் தலைவராக 2000 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், இந்த மையத்தின் சார்பில் நடத்தப்படும் உலகளாவிய தொழிற்கண்காட்சிகள் தலைவராக 2006 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கண்காட்சியின் மூலம் சங்கத்திற்குப் பேரும் புகழும் மட்டுமல்லாது அல்லது நல்ல தொரு தொகையினையும் திரட்டிக் கொடுத்தார், அதுமுதல் இத்தொழிற்கண்காட்சி இந்தியாவிலேயே மிகப்பிரம்மாண்டமானதொரு கண்காட்சியாக திகழ்ந்து வருகிறது. இவர் Indian Small Scale Paint Manufacturers Association தலைவராக இருந்து சிறு தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவிகரமாக இருந்துள்ளார்.

இவர் Rotary சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்து கொண்டு பல நல்ல காரியங்களைப் பொதுமக்களுக்கு செய்துவருகிறார். கொங்குச் சமுதாய வளர்ச்சிக்கும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்கும் சீரிய தொண்டாற்றி வரும் இவர், கொங்கினத்திற்கு பெருமை சேர்க்கும் முதல் தலைமுறை தொழிலதிபர் தற்சமயம் 2010-2011 ஆம் ஆண்டிற்கான Ambattur Industrial Estate Manufacturers Association (AIEMA) க்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் பொதுநல அமைப்புகளின் மூலம் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவருடைய S.சாத்வி B.E., M.S., (UK) என்ற மகள் தற்போது Leicester (UK) வில் பணியாற்றி வருகிறார். மகன் R.S. தீரஜ், IIIrd year MBBS., படித்து வருகிறார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள குறு, சிறு, நடுத்தர தொழில்கள் முன்னேற்றத்திற்குப் பாதை வகுத்துக் கொடுக்க வந்துள்ள நமது கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொருளாளர் திரு. R.செல்வராஜ் அவர்களை நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்.

❖❖❖❖❖

# வாழ்த்துச் செய்தி

பெறுநர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

அன்புமிகு பரணி பாலு அவர்களுக்கு,

வணக்கம். கொங்கு வேளாளர் சமுதாயத்தில் ஒரு குறையாகச் சொல்லப்படும் செய்தி என்னவென்றால், சாதனை புரிந்தவர்களையும், வெற்றி பெற்றவர்களையும், விருதுகள் பெறுவோர்களையும், உயர்ந்த பதவிகள் பெறுவோரையும் மற்றும் சமுதாயத்திற்காக அயராது உழைப்பவர்களையும் பாராட்டுவதிலும், பெருமைப்படுத்துவதிலும் மிகவும் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதுதான். கொங்கு நண்பர்கள் சங்கச் செய்தி மடலில் ஒருவரைப் பாராட்டி, வாழ்த்துச் செய்தி வெளியிட்டால், அதைப் பார்த்தபிறகு, அந்தச் சாதனையாளருக்கு தனிப்பட்ட முறையில் வாழ்த்துக்கள் குவிய வேண்டும் என்பது நமது நியாயமான எதிர்பார்ப்பு. ஆனால் அப்படி நிகழ்வதில்லை. காரணம் நம் சமுதாயத்தில் வாழ்த்துவதையும், பாராட்டுவதையும் ஒரு கடமையாகக் கூட பலர் நினைப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இந்தப் பாராட்டு மடலை அனுப்ப முடிவெடுத்து தங்களது சமுதாயப் பணியினைப் பாராட்டி இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

தன் சொந்தவேலைகளையே கவனிக்க நேரமில்லாமல் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மனிதர்கள் மிகப் பலர். ஒருசிலர் மட்டுமே, தான், தன்னுடைய குடும்பம், தன்னுடைய நெருங்கிய உறவினர் என்ற வட்டங்களைக் கடந்து, தான் பிறந்த ஊருக்காகவும், தான் பிறந்த சமுதாயத்திற்காகவும் பொறுப்புகளை விரும்பி ஏற்று, பொதுப்பணி ஆற்றுவதில் ஆர்வமும் ஆனந்தமும் பெற்று விளங்குகிறார்கள். அந்த மிகச் சிலரில் ஒருவராகத் தங்களைக் காண்பதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் கொள்கிறோம்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இன்று நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் ஊன்றி இன்று சங்கம் இவ்வளவு சிறப்பாக வளர்ந்துள்ளதற்கு முக்கியக் காரணமாக இருப்பவர்களில் தாங்களும் ஒருவர் என்பது மிகவும் பெருமையான செய்தியாகும்.

சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக நான்கு ஆண்டுகளும், பொருளாளராக இரண்டு ஆண்டுகளும் சிறப்பாகப் பணியாற்றிய தாங்கள், கடந்த நான்கு ஆண்டுகளாக சங்கத்தின் செயலாளர் பொறுப்பையேற்றுக்கொண்டு அனைவரும்

பாராட்டும்படியும், வியக்கத்தக்க அளவிலும் மிகச்சிறப்பாகப் பணியாற்றி வருகிறீர்கள்.

கொங்கு நண்பர்கள் சங்க வரலாற்றில் சாதனை மைல்கற்களாகத் திகழ்வன கொங்கு இல்லம், வெள்ளிவிழா இல்லம் மற்றும் தீரன் சின்னமலை மாளிகை ஆகியனவாகும். இவற்றில் வெள்ளிவிழா இல்லக் கட்டடப்பணியையும், தீரன்சின்னமலை மாளிகை கட்டடப் பணியையும் பொறுப்பேற்று சொந்த வீடு கட்டியபோது கூட இவ்வளவு அக்கறையும், சிரமமும் எடுத்திருக்க மாட்டார் என்று சொல்லும் அளவுக்கு, அயராத உழைப்பாலும், அசாத்தியத் திறமையாலும் மிக நல்லமுறையில் செய்துமுடித்து சாதனை படைத்துள்ளீர்கள். இதற்காக எங்கள் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழாவின் போது, நமது சமுதாயச் சான்றோர்கள் தங்களின் அரிய பணியைக் குறிப்பிட்டு, பல இன்னல்கள், தடைகள், நிதிநெருக்கடி போன்றவற்றைக் கடந்து, தீரன் சின்னமலை மாளிகையைக் காண்போர் வியக்கும் வண்ணம் எழில் மிகுந்ததாகவும் நல்ல தரமானதாகவும், உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளீர்கள் எனப் பாராட்டுகளைத் தெரிவித்தபோது, எங்களுக்கெல்லாம் பெருமையாக இருந்தது.

தீரன் சின்னமலை மாளிகை உருவாக்கத்தின் காரணமாக சங்கத்தின் பொருளாதார நிலை மிகவும் சிரமமாக இருந்த காலகட்டத்தில், சங்கத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்று, சங்கத்தை சீரிய முறையில் நடத்திச் செல்ல முக்கியக் காரணமாக இருந்ததோடு, பல லட்சங்கள் நன்கொடையாகப் பெற்று கொடுத்து உதவியுள்ளதற்கு எங்களது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எல்லோரிடமும் இன்சொல், சமுதாயச் சான்றோர்களிடம் மரியாதை கலந்த அன்பு, ஓய்வறியா உழைப்பு, சமுதாயத்திற்கு உழைக்கும் பேரார்வம், திறமையுடன் திட்டமிட்டுக் காரியமாற்றும் செயல்திறன், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அரிய பண்பு போன்றவையே தங்களின் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் காரணம் என்றால் அது மிகையல்ல.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் தங்களின் சேவையும், தொண்டும் மென்மேலும் தொடர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, மீண்டுமொரு முறை தங்களுக்கு எங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
பி.சென்னியப்பன், தலைவர்
மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

❖❖❖❖❖

# ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால்..

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 31 வது பட்டமளிப்பு விழா அது. பெற்றோர்களின் கனவை நனவாக்கிய மகிழ்ச்சியில் பட்டம் பெற மாணவர்கள் அணிவகுத்தனர். கோவை மாநகரின் பெருமைகளில் ஒன்றாக விளங்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கௌரவ டாக்டர் பட்டம் பெற நால்வர் வந்திருந்தனர். தங்கள் வாழ்நாளில் பாதிக்கு மேல், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்த அமால்கமேஷன் தலைவர் பத்மஸ்ரீ சிவசைலம், பாரம்பரியம் மிக்க முருகப்ப குழுமங்களின் தலைவர் வெள்ளையன், சக்தி சுகர்ஸின் தலைவர் குமரன் உள்ளிட்டவர்களோடு டாக்டர் பட்டம் பெறக் காத்திருந்தார், சக்தி குழுமங்களின் இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி.

வேளாண்மைத்துறையில் உழவர் பெருமக்களோடு கைகோர்த்து நின்று தொழில்துறையில் சாதித்த நால்வரில் சாந்தி துரைசாமி பெண்களின் பிரதிநிதியாக அந்த மேடையில் நின்றார். மற்ற மூவரும் தமிழகத்தின் பாரம்பரிய மிக்க தொழிலதிபர் குடும்பங்களின் பின்னணியில் இருந்து வந்திருக்க, பத்தாயிரம் ரூபாய்க்கு நகைகளை அடகு வைத்து, கணவரோடு சேர்ந்து தொடங்கிய பயணத்தில் சாந்தி துரைசாமி முதல் தலைமுறைத் தொழிலதிபர். வறுமையின் காரணமாகப் பள்ளிப் படிப்பையே பாதியில் நிறுத்திய சாந்தி துரைசாமியின் பட்டமளிப்பு விழாவின் ஏற்புரை, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு ஊக்கம் தருகிற நம்பிக்கை டானிக்.

“வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் மற்றும் துணைவேந்தர் அவர்களே! கற்றறிந்தோர் வீற்றிருக்கும் இம்மாபெரும் சபைக்கு முதற்கண் என் நெஞ்சம் நெகிழும் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மண்ணைத் தாயின் மடியாக நினைத்த உலகின் தொன்மையான நாகரிகத்தை உடையவர்கள் நாம். காட்டுமிராண்டியாக காடுகளிலும் மேடுகளிலும் அலைந்து திரிந்த மனிதனை நாகரிகமாக்கியது வேளாண்மை. பெருமையும் பாரம்பரியமும் மிக்க கல்விக் கோயிலான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கௌரவ டாக்டர் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்தப் பட்டம் உண்மையிலேயே எனக்கும் என் குடும்பத்தாருக்கும் சக்தி மசாலா நிறுவனத்துக்கும் கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும்.

சமூகத்தின் அடித்தட்டில் ஒரு சாமானியக் குடும்பத்தில் பிறந்து முதல் தலைமுறைத் தொழில் முனைவோராக வந்துள்ள எனக்கு, இத்தகைய ஒரு சிறப்பான கௌரவத்தை வழங்கியுள்ள இப்பல்கலைக்கழகத்தினைச் சார்ந்த அனைத்துப் பெருமக்களுக்கும் முதற்கண் என் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக்கல்வியில் ஆறாம் வகுப்பு எட்டியதையே பெரும் சாதனையாகக் கருதும் குடும்பப் பின்னணியில் பிறந்து வளர்ந்தவள் நான். வீட்டு வாசல்படியோடு உலகம் முடிந்துவிடுவதாக எண்ணிக்கொள்ளும் கோடிக்கணக்கான பெண்களுள் நானும் ஒருத்தி. வீட்டு வாசல் படியிலிருந்துதான் உலகம் ஆரம்பிக்கிறது என்பதை என் கைப்பிடித்து எனக்கு சொல்லிக்கொடுத்து, இன்று உங்கள் முன் நின்று பெருமைக்குரிய இந்த டாக்டர் பட்டத்தைப் பெறுவதற்குக் காரணமான கணவரை நெகிழ்ச்சியோடு இந்தத் தருணத்தில் நினைக்கின்றேன். தன்னுடைய வெற்றியில் எனக்கு சமபங்கு அளித்தும், எனக்கு எல்லாமுமாக இருக்கிற எனது அன்புக் கணவர் திரு. பி.சி.துரைசாமி அவர்களுக்கு இந்தப் பெருமையினை நன்றியோடு காணிக்கை ஆக்குகிறேன்.

பரம்பரையாக விவசாயக் குடும்பப் பின்னணியில் பிறந்து வளர்ந்த நாங்கள், மஞ்சள் வணிகத்தை எங்கள் அடையாளமாகத் தேர்ந்தெடுத்தோம். வேளாண்மையும், வேளாண்மையோடு நெற்றி வியர்வையை வேளாண்மைக்காகச் சிந்துகிற ஒவ்வொருவரையும் சமூகத்திற்குப் பங்களிப்பு செய்தவராகவே கொள்ள முடியும். தினமும் மஞ்சள் பூத்த கைகளோடு வருகிற ஆயிரக்கணக்கான விவசாயப் பெருமக்களை தரிசிக்கிற பாக்கியம் பெற்றவர்கள் நாங்கள். நிறைவான உழைப்பும், அளவான லாபமும் உழவை நம்பி இருக்கிற மக்களோடு எங்களுடைய ஒவ்வொரு நாளும் விடிகிறது. ஒவ்வொரு நாளும் முடிகிறது.

கிராமங்களின் ஊர்ச் சந்தைகளில் தொடங்கிய எங்கள் மஞ்சள் வணிகம், காலத்திற்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக்கொண்ட போது சக்தி மசாலா தமிழக இல்லங்களில் ஓர் அங்கமாகிப்போனது. கணவன் வேலைக்கும், மனைவி வீட்டுப் பராமரிப்பிலும் ஈடுபட்ட காலம் மெதுவாக மாறத் தொடங்கியபோது நாங்களும் வணிகத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்தோம். கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகிற காலம் வரும்போது, மஞ்சளைத் தரம் பிரித்து வாங்கி சுத்தம்

செய்து அரைத்து சேமித்து வைக்கிற சூழல் இல்லாமல் போனது. வேலைக்குப் போகிற இல்லத்தரசிகளின் எதிர்பார்ப்பைப் பாக்கெட்டில் அரைத்த மஞ்சள் என்கிற புதுமை நிறைவேற்றியது.

புதுமையாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வேகமும், வேட்கையும் இருந்ததால் மசாலா பொடிகள் தயாரிப்பினைத் தொடங்கினோம். 35 ஆண்டுகளுக்கு முன், பாக்கெட்டுகளில் மசாலாப் பொடிகள் என்பது நம் குடும்பத் தலைவிகளுக்கு அறிமுகமில்லாத ஒன்று. இன்று தலைவிகளுக்கு வீட்டிலும் அவை அவசியத் தேவை என்பதை விளக்க வேண்டியதில்லை.

தரமான தயாரிப்புகளை அறிமுகப் படுத்தினால் மக்களிடம் ஆதரவு இருக்கும் என்ற ஒரே நம்பிக்கையில் மசாலா பொடிகளைச் சந்தைப்படுத்தினோம். ஆரம்பத்தில் இல்லத்தரசிகள் எங்கள் தயாரிப்புகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கியபோதும், விடாமுயற்சியோடும், நம்பிக்கையோடும் எங்கள் செயல்பாடுகள் இருந்ததால், வெற்றி எங்கள் வசமானது. பொருளாதாரப் பின்புலம் இல்லாத, மாறிவரும் உலகமயமாக்கலில் சந்தை மாற்றங்களை அறியாத முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். ஓய்வறியாத உழைப்பும், தோய்வறியாத முயற்சியும் மட்டுமே எங்களின் நண்பர்கள். மக்களின் பேராதரவு என்கிற உறுதுணையும் எங்களுக்குக் கிடைத்தது. ‘சக்தி மசாலா நிறுவனம் தரமான பொருட்களையே விற்பனை செய்யும்’ என்கிற மக்களின் நம்பிக்கையை இப்போதும் எப்போதும் சொத்தாகக் கருதுகிறோம்.

அன்றிலிருந்து இன்று வரை தொடரும் இந்த வெற்றிக்கு நாங்கள் செய்பவை... புதிய புதிய தயாரிப்புகளை மக்கள் விரும்பும் வகையில் அவர்கள் தேவைகளை உணர்ந்து அறிமுகப்படுத்துவது, எங்கள் தயாரிப்புகளை முழுவீச்சில் சந்தைப்படுத்துவது. இறைவனுடைய அருள், மக்களுடைய ஆதரவு, இரவு பகல் பாராது உழைக்கும் எங்கள் நிறுவன ஊழியர்கள், குடும்ப உறுப்பினர்கள் என அனைவரும் எங்களுடன் பயணிப்பதால், 35 ஆண்டுகளுக்கு முன்பு நகைகளை விற்று, 10 ஆயிரம் ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப்பட்ட எங்கள் நிறுவனம் இன்று ரூ. 350 கோடியைத் தாண்டி விற்பனை செய்துவருகிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சக்தி மசாலாவின் தயாரிப்புகள் ஆண்டொன்றிக்கு 36,000 மெட்ரிக் டன் வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதால் விவசாயப் பெருமக்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்கிறோம். கிராமப்புறங்களில் வேலைவாயப்பினை, குறிப்பாகப் பெண்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் பெருக்கித் தருகிறோம்.

சக்திதேவி அறக்கட்டளை எனும் சமுதாயச் சேவை அமைப்பைத் தொடங்கி

சமூகப்பணிகள் ஆற்றுவதன் மூலம், தொழில் நிறுவனங்களுக்கான சமுதாயப் பொறுப்புணர்வோடு செயல்படுகிறோம்.

இந்த டாக்டர் பட்டம் என்ற கௌரவம், 'நமது விவசாயப் பெருமக்களுக்கு மேலும் புதிய வாய்ப்புகளை நாங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும், சமுதாயத்தில் நலிவடைந்தோர் வாழ்வில் மேலும் மேலும் ஒளி தீபம் ஏற்ற வேண்டும்' என்பதை நினைவூட்டுவதாகவே நான் கருதுகிறேன். எனக்குக் கிடைத்திருக்கும் இந்தக் கௌரவம், என்னைப் போன்ற பெண்களுக்கு நம்பிக்கையாக மாற என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வேன் என்கிற உறுதியை இங்கு அளிக்கிறேன்.

பெண்கள் நூற்றாண்டில் பெண்களைப் போற்றும் விதமாக, எனக்கு இப்படி ஒரு பெருமையினை வழங்கிய மேதகு ஆளுநர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், துணைவேந்தர் உள்ளிட்ட அனைவருக்கும் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்".

கௌரவங்களும், அங்கீகாரங்களும் கிடைப்பது முடிவு அல்ல. அதை ஓர் இனிய தொடக்கமாகவே நான் பார்க்கிறேன். இது போன்ற அங்கீகாரங்கள் நமது சமூகப் பொறுப்பை இன்னும் அதிகமாக்குகின்றன என்பதை நான் நினைவில் கொண்டுள்ளேன்.

பட்டமளிப்பு விழாக்கள் பொதுவாக ஆங்கில முறையில் நடைபெறுவதே வழக்கம். கோவை செம்மொழி மாநாட்டின் பிரதிபலிப்பாக, இப்பட்டமளிப்பு விழா முழுக்க முழுக்க தமிழில் நடந்தது. சாந்தி துசைாமி தனது ஏற்புரையைத் தமிழிலேயே நிகழ்த்தினார். எதற்காக இந்த கௌரவ டாக்டர் பட்டம் அவருக்கு வழங்கப்படுகிறது என்பதைச் சொல்லி துணைவேந்தர் அழைக்க, சாந்தி துரைசாமிக்கு டாக்டர் பட்டத்தை வழங்கினார், வேளாண் அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம். மேடைக்கு எதிரே புகைப்படக்காரர்கள் சூழ்ந்து கேமரா வெளிச்சத்தைப் பாய்ச்சினர். முதல் வரிசையில் அமர்ந்து மனைவியின் பட்டமளிப்புப் பெருமையினைப் பெருமிதத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார் திரு.துரைசாமி . தன்னைக் கைப்பிடிக்கும்போது ஆறாம் வகுப்பு மட்டுமே முடித்திருந்த மனைவி, டாக்டர் பட்டம் பெறுகிற கண்கொள்ளாக் காட்சி அவருக்கு சரியாகத் தெரிவியல்லை. எழுந்து நின்று, கிடைக்கும் இடைவெளியில் எக்கி எக்கி திரு. துரைசாமி பார்த்துக்கொண்டிருந்ததை யாரும் கவனித்திருக்க வாய்ப்பில்லை. அந்தக் கூட்டத்தில் பட்டம் வாங்கும்போது திருமதி சாந்தி துரைசாமி அவர்களின் கைகள் இணைவேந்தரிடமும், கண்கள் கணவரிடமும் இருந்தன. ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஆண் நிற்கிற கௌரவம், பட்டத்தைவிட மேன்மையானது.

நன்றி : நம் தோழி 2010 ஆகஸ்ட்

❖❖❖❖❖

# விருதுகள் வழங்கப்படுகின்றன

இந்திய நாட்டு ஜனாதிபதியால் குடிமக்களுக்கு கீழ்க்கண்ட கௌரவ விருதுகள் வழங்கப்படுகின்றன.

1. பத்மஸ்ரீ, 2, பத்மபூஷன், 3. பத்ம வீபூஷன், 4. பாரத ரத்னா


மேற்படி விருதுகளில் மிக உயர்ந்த விருதான பாரத் ரத்னா விருது பெற்றவர்களின் பட்டியல் கொங்கு மக்களின் பார்வைக்காக அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. சர்வ பள்ளி ராதா கிருஷ்ணன் | 1954 |
| 2. சக்ரவர்த்தி ராஜகோபாலச்சாரி | 1954 |
| 3. சர்.சி.வி. ராமன் | 1954 |
| 4. பகவான்தாஸ் | 1955 |
| 5. சர்.விஸ்வேஸ்வரய்யா | 1955 |
| 6. ஜவஹர்லால் நேரு | 1955 |
| 7. கோவிந்த் வல்லப பந்த் | 1955 |
| 8. கேசப் கார்வே | 1958 |
| 9. டாக்டர் பி.சி. ராய் | 1961 |
| 10. புருசோத்தம் தாஸ் டாண்டன் | 1961 |
| 11. டாக்டர் ராஜேந்திரன் பிரசாத் | 1962 |
| 12. டாக்டர் ஜாஹீர் ஹிசைன் | 1963 |
| 13. பாண்டுரங் வாமன்கானே | 1963 |
| 14. லால் பகதூர் சாஸ்திரி | 1966 |
| 15. இந்திரா காந்தி | 1971 |
| 16. வி.வி.கிரி | 1975 |
| 17. கே.காமராஜ் | 1976 |
| 18. அன்னை தெரசா | 1980 |
| 19. ஆச்சார்ய வினோபா பாவே | 1983 |
| 20. கான் அப்துல் கபார்கான் | 1987 |
| 21. எம்.ஜி.ராமச்சந்திரன் | 1988 |
| 22. பி.ஆர்.அம்பேத்கர் | 1990 |
| 23. நெல்சன் மண்டேலா | 1991 |
| 24. ராஜீவ் காந்தி | 1991 |
| 25. சர்தார் | 1991 |
| 26. மௌலானா அப்துல் கலாம் ஆசாத் | 1992 |

| | |
|---|---|
| 27. சத்ய ஜித்ரே | 1992 |
| 28. ஜே.ஆர்டி.டாடா | 1992 |
| 29. ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் | 1997 |
| 30. குல்சாரிலால் நந்தா | 1997 |
| 31. அருணா ஆசப் அலி | 1997 |
| 32. எம்.எஸ்.சுப்புலட்சுமி | 1998 |
| 33. சி.சுப்பிரமணியம் | 1998 (கொங்கு இனம்) |
| 34. ஜெய பிரகாஷ் நாராயணன் | 1998 |
| 35. பண்டிட் ரவி சங்கர் | 1999 |
| 36. அமர்த்தியா சென் | 1999 |
| 37. கோபிநாத் போர்லால் | 1999 |
| 38. லதா மங்கேஷ்கர் | 2001 |
| 39. உஸ்தாத் பிஸ்மில்லாகான் | 2001 |
| 40. பண்டிட் பீம்சேன் ஜோஷி | 2008 |

தொகுப்பு : -
ஊத்தங்கரை P.ராமசாமி
செயற்குழு உறுப்பினர், கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

## வாழ்த்துகிறோம்



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், தொ.சேடர்பாளையம் கிராமத்தில் வசிக்கும் மொளசி கண்ணங்குலத்தைச் சேர்ந்த திரு.சண்முகசுந்தரம்–திருமதி விஜயா அவர்களின் புதல்வி செல்வி. ச.மோனிஷா அவர்கள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தமிழ்ப் பாடத்தில் 197/200 மதிப்பெண் பெற்று மாநிலத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

செல்வி ச.மோனிஷா எதிர்வரும் தொழிற்கல்வி பயிலும் காலத்தில் மென்மேலும் சாதனைகள் புரிந்திட கொங்கு நண்பர்கள் சங்கம் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

செய்தி : ஆசிரியர் தி.செ.பழநிவேல், நாமகிரிப்பேட்டை

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



அகில இந்திய ஓய்வூதியர்கள் சம்மேளனம் தனது 31 வது ஆண்டு விழாவை 30-07-2010 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை எழும்பூரிலுள்ள ஹோட்டல் இம்பீரியலில் நடத்தியது.

அதில் முதியோர் மருத்துவர் கொங்குமாமணி டாக்டர். வ.செ.நடராசன் அவர்களின் Healthy Nutrition for the Elderly and Elders, Health என்ற இரண்டு ஆங்கில நூல்கள் திரு. V.K.சுப்புராஜ் IAS., செயலாளர், தமிழ்நாடு சுகாதாரத் துறை அவர்களால் வெளியிடப்பட்டது. டாக்டர் அவர்களின் சேவையைப் பாராட்டி திரு. V.K.சுப்புராஜ் அவர்கள் நினைவுப் பரிசை வழங்கினார். முதியோர்களுக்குப் பயனுள்ள நூல்களை எழுதியுள்ள டாக்டர். வ.செ.நடராசன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

(நூல்கள் பற்றி விவரம் அறிய : 26267282, 26412030)

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



நாமக்கல்மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், நாராயணபாளையத்தைச் சேர்ந்த திரு. குழந்தைவேலு அவர்களின் மகன் டாக்டர் எஸ்.கே.மகுடேஸ்வரன் M.V.Sc., முதுநிலை கால்நடை மருத்துவப் படிப்பில் தங்கப்பதக்கம் பெற்று, ஆளுநர் மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் மூலமாக பதக்கத்தையும், சான்றிதழையும் பெற்றுள்ளார். இவர் செங்கினி குலத்தைச் சார்ந்தவர். டாக்டர் எஸ்.கே.மகுடேஸ்வரன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, கால்நடை மருத்துவத் துறையில் மேன்மேலும் சாதனைகள் படைத்திட வாழ்த்துகிறது.

செய்தி : திரு. பொன். கோவிந்தராஜ்,
இணைச்செயலாளர், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சங்கக் கூட்டமைப்பு

❖❖❖❖❖

# அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம்

தாயும் சேயும் ஒன்று என்றாலும் வாயும் வயிறும் வேறு வேறுதான் !

அன்பார்ந்த அமராவதி விவசாயப்பெருமக்களே !பொதுமக்களே ! மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களே ! வணக்கம்.

காவிரிப் பிரச்சினையை இதுவரை முழுமையாகப் பார்த்தோம், அக்குவேறு, ஆணிவேறாக இப்போது அலசி ஆராய்வோம்.

காவிரி நடுவர் மன்றம், 5 தொகுதிகளாக, மொத்தம் 870 பக்கங்களில், ஆங்கிலத்தில் கடந்த 5-2-2007 அன்று தனது இறுதித் தீர்ப்பை வெளியிட்டது. சிலர் தீர்ப்பு திருப்தி தருவதால், அரசு ஆணையாக கெஜட்டில் வெளியிட வேண்டும் என்றனர். கலைஞரும், காவிரி சங்கத் தலைவர் ரங்கநாதனும், இடது கம்யூனிஸ்ட் சங்க பாலகிருஷ்ணன் அவர்களும் உச்சநீதிமன்றத்திற்குப் போகாமல் நடுவர் மன்றத்திலேயே மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றனர். சட்டசபையில் வானளாவப் புகழ்ப்பட்டனர். ஆனால் நமது சங்கம் மட்டுமே 'அமராவதி - பவானி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், உச்சநீதி மன்றத்தில் மட்டுமே அப்பீல் செய்யப்படவேண்டும்' என்று ஆணித்தரமாகக் கூறியது. எழுச்சி ஊர்வலம் - கடையடைப்பு நடந்தது. ஆனால் அமைச்சர் துரைமுருகனோ, அமராவதி பவானி விவசாயிகளுக்கு தற்போது எந்தப் பாதிப்பும் இல்லை. பாதிக்கப்படும் போது வேையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று கூறினார். வழக்கு நடந்த 16 வருடங்களிலோ அல்லது தீர்ப்புக்குப் பின் கூட்டப்பட்ட இரண்டு சர்வ கட்சி கூட்டங்களுக்கோ நாம் அழைக்கப்படவும் இல்லை. நமது குறைகளைக் கேட்கவுமில்லை. மேலும், தமிழக அரசு, வெந்த புண்ணில் வேல் சொருகுவது போல், டெல்லியில் 'உப்பு சப்பில்லா' அப்பீலைத் தாக்கல் செய்துள்ளது. கோவை மாவட்டத்தில் 14 க்கு 3 எம்.எல்.ஏ. என்பதைத்தான் கலைஞர் மறைபொருளாகக் கூறுகிறார்.

நான்கு மாநிலங்களும், தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நடுவர் மன்றத்திலும், மேல் முறையீட்டு மனுக்களை உச்சநீதி மன்றத்திலும் தாக்கல் செய்துள்ளன. புல் பெஞ்ச் விசாரணைக்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கிருஷ்ணா, கோதாவரி, நர்மதா போன்ற நடுவர் மன்றங்கள், நீர்வளம் உபரியாக இருந்த காரணத்தால் செல்வத்தைப் பங்கு போட்டன. ஆனால் காவிரி நடுவர் மன்றமோ, பற்றாக்குறை வறுமையைப் பங்கு போட்டது. ஐம்பது சதவிகித நம்பகத்தன்மையை கணக்கில் எடுத்துக்கொண்டு நான்கு மாநிலங்களின் மொத்த நீர்வள ஆதாரம் 740 டி.எம்சி. எனக் கணக்கிட்டது. அசலுக்கு முழு உத்திரவாதம் தரும் வங்கியானது நமக்கு குறைந்த வட்டியைத் தான் தரும். அதுபோல் 75 சதவிகிதி நம்பகத்தன்மை என்றால் 740 என்பது 520 டி.எம்.சி. ஆகக் கணக்கிடப்படும். நான்கு மாநிலங்களின் எல்லா அணைக்கட்டுகளும் இந்த 740 டி.எம்.சியில் 42 சதவிகித நிரை மட்டுமே தேக்கி வைக்க முடியும். 100 வருட மழை அளவு ஆயக்கட்டு, நிலங்களின் பரப்பளவு, பயிர்வகை, மக்கள் தொகை போன்ற எல்லாப் புள்ளி விபரங்களின் அடிப்படையில்தான் 740 டி.எம்.சி. யை, தமிழ்நாட்டிற்கு 419, கர்நாடகாவுக்கு 270, கேரளாவுக்கு 30, புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. எனவும் மாசுக்கட்டுப்பாட்டிற்குப் 10, கடலில்

வீணாவது 4 என்று பங்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் வளத்தைக் கணக்கில் எங்குமே எடுக்கவே இல்லை.

காவிரி நீர்ப்பங்கீட்டில், சமரசம் செய்வதற்காக மத்திய அரசு 1972 ஆம் ஆண்டு காவிரி உண்மை நிலை அறியும் குழுவை (CFFC) அமைத்தது. நான்கு மாநிலங்களிலும் காவிரிப்படுகையை ஆராய்ந்து மொத்த நீர்வளம் 748 டி.எம்.சி. என்று அறிக்கை தந்தது. (நடுவர் மன்றத்தின் அறிக்கை 740 டி.எம்.சி)அதன் அடிப்படையில் நான்கு மாநில முதல்வர்களும் டெல்லியில் பலமுறை கூடிப்பேசி ஒரு மாதிரி ஒப்பந்தத்தில் (Draft) கையெழுத்திட்டனர். பிரச்சினை சுமூகமாக முடிந்ததில் எல்லோருக்கும் மகிழ்ச்சியே.

ஆனால் திடீரென்று இறுதி ஒப்பந்தத்தில் கையெடுத்திட மறுத்து, கர்நாடகம் பின் வாங்கியது ஏன்?

748 டி.எம்.சி. யை நான்கு மாநிலங்களுக்கும் பிரிக்கும்போது, அந்தந்த மாநிலங்களில் அன்றையை தேதியில் உள்ள சாகுபடி நிலங்களை மட்டுமே கணக்கில் எடுத்து தான் தண்ணீரைப் பங்கீடு செய்வார்கள். 1974 ஆம் ஆண்டில் கர்நாடகாவில் இருந்த பாசன நிலங்கள் 10 லட்சம் ஏக்கர்மட்டுமே. 1974 ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் பின்வாங்கிய கர்நாடகம், முழுவேகத்தில் மேலும் 18 லட்சம் ஏக்கராவை பாசனப் பகுதியில் சேர்த்துக்கொண்டது. ஆக 1974 ஆம் வருடத்திற்கு 2.6.1990 (நடுவர் மன்றம் அமைத்த தேதி) வரை உள்ள இடைப்பட்ட 16 வருடங்களை வேண்டும் என்றே இழுத்தடித்து, 18 லட்சம் ஏக்கர் புதிய நிலங்களை ஆயக்கட்டில் சேர்த்து 748 டி.எம்.சி. தண்ணீரில் பெருமளவை கைப்பற்ற டத்திய ராஜ தந்திரத்தில் வெற்றியடைந்தது கர்நாடகாவே !

காவிரி நடுவர் மன்றம் 1892, 1924, 1929 ஆம் வருட ஒப்பந்தங்கள் இனி செல்லாது என்று அறிவித்துள்ளது. கர்நாடகாவில் அனுமதியின்றிக் கட்டப்பட்ட எல்லா அணைகளுக்கும் தற்போது அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதற்கு முன்பு, அண்டை மாநிலங்களுடன், கிருஷ்ணா, கோதாவரி, நர்மதா போன்ற நடுவர் மன்றங்களில் போதிய அனுபவம் கர்நாடகாவிற்கு உண்டு. ஒரு நதிப் படுகையின் நீரை,மற்றொரு பகுதிக்கு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. கோவை நகரத்திற்கு மட்டுமே குடிநீருக்காக விதி விலக்கு தரப்பட்டுள்ளது.

1924 வருட ஒப்பந்தத்தில் கேரள மாநிலத்திற்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்று கூறி, தமிழ்நாடும், கர்நாடகாவும், கேரளாவை கடந்த 35 ஆண்டுகளாக அவமானப்படுத்தி புறக்கணித்து விட்டன. ஆனால் 1956 ஆம் வருட மொழி வழி மாநில பிரிவினைக்குப்பின், இதே கேரளத்துடன் தானே சிறுவாணி நீர் சம்பந்தமாக (இதுவும் காவிரிப் படுகையுடன் சேர்ந்ததுதான்) 10-5-1969 அன்று தமிழ்நாடு ஒப்பந்தம் செய்து கொண்டது. அண்டை மாநிலங்களை மதிக்காத நாம், எந்த முகத்தைக் கொண்டு, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைக் கிழக்கே திருப்பு எனக் கேட்க முடியும்.?

காவிரி நடுவர் மன்றம், 'பம்ப்செட்' இறைவைப் பாசனத்தைக் கர்நாடகாவில் ஒரு இடத்தைத் தவிர வேறு எங்கும் அனுமதிக்கவில்லை. அப்படியானால், எலையமுத்தூர் வயலூர் பிரிக்கால்-ஜெயின் கம்பெனியின் ராட்சதக் குழாய்கள் நான்கும், தாராபுரத்திற்கும் சின்ன தாராபுரத்திற்கும் இடையே (அமராவதி ஆறு அதிக ஆழத்தில் பாய்வதால் வாய்க்கால்

பாசனம் இங்கு சாத்தியமில்லை) 35 கி.மீட்டர் தூரத்திற்கு வைக்கப்பட்டுள்ள 5000 பம்ப்செட்டுகள். ஆங்கிலேயன் தந்த செம்புப் பட்டயங்களின்உரிமை பற்றி நடுவர் மன்றம் அனுமதி தரவில்லை, இவற்றின் எதிர்காலம் என்ன? மேலும் 1934 க்கு முன்பு வெட்டப்பட்ட கிணறுகள் என்று கூறி என்.ஒ.சி. வாங்கி மின்சாரம் பெற்ற கிணறுகளைப் பற்றியும் நடுவர் மன்றம் எதுவும் கூறவில்லை.

அமராவதியின் ஆரம்ப உபநதிகள் மூன்று ஆகும். தேனாறு, இது வட்டவடைப்பகுதியில் இருந்து வருவது. பாம்பாறு இது மறையூர்ப் பகுயில் இருந்து வருவது. மூனறாவதாக சின்னாறு. இது கோடந்தூர் சின்னாறு செக்போஸ்ட் வழியாக கேரள தமிழக எல்லைக்கோடாக வருவது. சின்னாற்றைத் தடுத்து, சிறு கால்வாய்கள் மூலம் தாயனன்குடி போன்ற கேரளா, முதுவார் ஆதிவாசிகள், ஏராளமாக விவசாயம் செய்கிறார்கள். இந்த விவரங்கள், தமிழக அரசின் வரைபடங்கள் மற்றும் நடுவர் மன்றத்தின் முன்பு கொடுத்த ஆவணங்களிலோ சரியாகக் குறிக்கப்படவில்லை (தொகுதி 5 பக்கம் 116) அமராவதிக்கு வரும் சின்னாற்றுத் தண்ணீரைக் கேரளா பயன்படுத்தும்போது, நாம் என் பாம்பாற்றில் இருந்து 3 டி.எம்.சியைக் கேரளாவுக்கு தரவேண்டும்?

1924 ல் தமிழ்நாட்டின் காவிரிப் பாசனம் 16 லட்சம் ஏக்கராவாக இருந்தது. அது 1990 ல் 29 லட்சம் ஏக்கராவாக உயர்ந்தது. அதேபோல், 1924ல் 3 லட்சம் ஏக்கராவாக இருந்த கர்நாடகத்தில் 1990ல் 29 லட்சம் ஏக்கராவாக உயர்ந்துவிட்டது. குறிப்பாக கர்நாடகாவில் 1974க்குப் பின்னர்தான் 18 லட்சம் ஏக்கர்கள் புதிதாக ஆயக்கட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இப்படி வானளாவ உயர்த்தப்பட்ட புதிய ஆயக்கட்டு நிலங்களின் தேவைக்காக அமராவதியும், பவானியும் 9 டி.எம்.சி நீரைத் தாரை வார்க்க வேண்டுமா? எங்கே தேள் கொட்டியது? எங்கே வலிக்கிறது?

முதல் இரண்டு 5 ஆண்டுத் திட்டப் பணத்தில், காமராசர் அணைகளையும், பள்ளிக்கூடங்களையும் கட்டிக்கொண்டிருந்த போது, நிஜலிங்கப்பா, வானளாவிய சட்டசபை வளாகத்தையும், பிருந்தாவனத்தையும் கட்டிப் பதவியிழந்தார். கர்நாடகம் காலம் கடந்தே விவசாயத் திட்டங்களின் மீது அக்கறை கொண்டது.

இறுதியாகக் காவிரி நடுவர் மன்றம், தமிழ்நாட்டில் 24.71 லட்சம் ஏக்கர் பாசனத்தைக் காவிரியில் மட்டும் அங்கீகரித்துள்ளது. அதேபோல் கர்நாடகாவில் 18.85 லட்சம் ஏக்கரை மட்டும் அங்கீகரித்துள்ளது. மேலும் பெங்களூரு நகரம், மூன்றில் ஒரு பங்கு மட்டுமே காவிரிப்படுகையில் வருவதால் அதற்கு மட்டுமே குடிநீர் தர இயலும் என்கிறது.

மொத்தம் கிடைக்கும் 740 டி.எம்.சி. யில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டது. 419 டி.எம்.சி. பில்லி குண்டுலுவில் இருந்து மேட்டூர் அணை வரை உள்ள பகுதியில் 25 டி.எம்.சி. கிடைக்கும். மேட்டூர் அணைக்குக் கீழே 232 டி.எம்.சி. கிடைக்கும், மொத்தம் நமது பகுதியில் கிடைப்பது. (232+25) 257 டி.எம்.சி இதில் கேரளாவுக்கு 9, புதுச்சேரிக்கு 7, கடலில் வீணாவது 4 என மொத்தம் கழிவது 20 டி.எம்.சி. (257-20). மீதி உள்ளது 237 டி.எம்.சி. ஆகவே நமக்குத்தேவைப்படும். பாக்கியை (419-237) 182 டி.எம்.சி. யை கர்நாடகா நமக்குத் தர வேண்டும். மேலும் 10 டி.எம்.சி. சுற்றுப்புறச் சூழலுக்காக, மொத்தம்192 டி.எம்.சியை பிரித்து மாதாமாதம் இவ்வளவு என, பில்லிகுண்டுலுவில் இருந்து கர்நாடகம் தமிழ்நாட்டிற்கு அனுப்ப வேண்டும்.

அமராவதியில் இருந்த 4350 ஏக்கர் இருபோக சாகுபடியும், கொடிவேரி காளிங்கராயன் பவானியிலும் 38,500 ஏக்கர்கள் இருபோகமும் தள்ளுபடி செய்யப்பட்டு, ஒருபோக நிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. விரிந்த, செறிந்த (Extensive - Intensive) வேளாண்மையில், இருபோகத்தை ஒரு போகமாக்கி, ஆயக்கட்டை விரிவாக்கினால் சமநீதி கிடைக்கும் என நடுவர் மன்றம் கூறுகறது. ஊருக்கு மட்டும் தான் உபதேசமா? தஞ்சாவூருக்கில்லையா?

அமராவதி அணை கட்டப்பட்ட போது, பழைய பாசனப் பகுதிகளான 25 கால்வாய்ப் பாசனத்திற்கு முன்னுரிமை அளித்து மாதாமாதம் இவ்வளவு கன அடி அமராவதி ஆற்றில் தரப்படும் என்றும், பற்றாக்குறை காலங்களில் அணைக்கு உள்ளேயே, மணல் மூட்டைக் கால்வாய் மூலம் ராமகுளம் பாசனம் பெறும் உரிமைக்கான அரசு ஆணையானது தற்போது செல்லாது என அறிவித்துள்ளது. இந்த அரசு ஆணையை, தமிழக அரசு, நடுவர் மன்றத்தின் பார்வைக்குக் கொண்டு சென்றதா என்பது சந்தேகமே!

தற்போது நடுவர்மன்றம், ஆற்றுப் பாசனத்தில் 150 நாட்களுக்கும், அமராவதி பிரதான கால்வாயில் 135 நாட்களுக்கும் மட்டுமே ஒரு போகத்திற்குத் தண்ணீர் தரப்படும் என்று கூறியுள்ளது. இது முன்பு 330 மற்றும் 180 நாட்களாக இருந்தது.

சுற்றுப்புறச் சூழலுக்காக 10 டி.எம்.சியைப் பெற்று அதைக் காவிரிக்கு மட்டும் சொந்தம் கொண்டாடுவது ஏன்? அமராவதியும் - பவானியும், ஒரத்துப்பாளையம் பகுதிகளும் மாசுபடுவதில்லையா? பிரித்துத் தரவேண்டாமா?

50 ஆண்டுகளுக்கு முன்பு, அமராவதி கூட்டுறவு சக்கரை ஆலை நிறுவும் போது, பிரதான கால்வாய்ப் பாசனத்தில் 3000 ஏக்கர் கரும்பு பயிரிட உத்தரவாதம் தந்தது. அந்த அரசு ஆணை தற்போது பறிபோய்விட்டதால் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் எதிர்காலம் என்ன? இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாசனம் பெறும் ‘கின்னஸ் சாதனை”பி.ஏ.பி. நிலங்களா, சர்க்கரை ஆலையைக் காப்பாற்ற போகின்றன?

இருபோக ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்பட்டுத்தப்பட்ட நிலங்களை, தற்போது ஒருபோகமாக அறிவித்தால் சட்ட சிக்கல் எழாதா?

அணையின் நீர்வரத்தில் 20 சதவிகிதம் மட்டுமே குடிநீர்த் திட்டங்களுக்கு எடுத்து கொள்ளலாம். அதுவும் ஆயக்கட்டுக்குள் அடங்கும் கிராமங்களுக்கு மட்டுமே. அப்படி என்றால், அமராவதி அணையில் இருந்து நேரடியாகவும், ஆற்றில் இருந்தும் பி.ஏ.பி. பாசனக்கிராமங்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்டங்கள் மூலம் தண்ணீர் விநியோகம் எதிர்காலத்தில் பாதிக்காதா? செல்லுமா?

காவிரி படுகைக்குச் சம்பந்தம் இல்லாத சேத்தியாத் தோப்பு-வெள்ளாறு பகுதியில் 37,900 ஏக்கர் நிலங்களை, காவிரியின் ஆயக்கட்டுப் பகுதியில் சேர்க்க முயன்று, தள்ளுபடி செய்யப்பட்டது. இது எந்த நோக்கத்தில் நடந்தது?

கோவையில் நடந்த மாட்டு வண்டி முற்றுகைப் போராட்டத்தில் மன்றாடியாரும், கொங்கு மண்டல விவசாயிகளும் அவமானப்படுத்தப்பட்டனர். ஒட்டன்சத்திரத்தில், விவசாயச் சங்கக் கட்டிடம் தரைமட்டமாக்கப்பட்டது. எண்ணற்ற விவசாயிகள்

போராட்டத்தில் உயிரை இழந்து தியாகிகளாக உள்ளனர். காவிரிப் பிரச்சனையில், தமிழக அரசால் நியமிக்கப்பட்ட பொறியாளர்களும், வழக்குரைஞர்களும் கடந்த 16 வருடங்களில், வழக்கு நடக்கும் போது நம்மைக் கலந்து ஆலோசிக்க வில்லை. நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிற்குப் பின்னர் இருமுறை நடந்த சர்வ சட்சி சங்கக் கூட்டத்திற்கும் நம்மை அழைக்கவில்லை.

தமிழக அரசு தற்போது உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீடு மூலம், நமது குறைகள் நிவர்த்தி ஆகும் என்ற நம்பிக்கை எள்ளளவும் கிடையாது. ஆகவே, ராமகுளம் பாசன விவசாயிகள் சங்கம் டெல்லியில் தாக்கல் செய்துள்ள மேல் முறையீட்டு வழக்குக்கு நமது முழு ஆதரவையும் தருவோம். உறக்கத்தில் இருந்து விடுபட்டு கொங்கு மண்டலத்தில் தன்மானத்தைக் காக்கும் பொருட்டும், இழந்த உரிமைகளை மீண்டும் நிலைநாட்டிடவும், அமராவதி பவானி விவசாயிகள் அனைவரும் ஒற்றுமையாகத் திரள வேண்டுமென அறைகூவல் விடுக்கிறோம். வரும் சட்டமன்றத்தேர்தல் மூலம் அமைய இருக்கும் கூட்டாட்சியில் கொங்குமண்டல சட்டசபை உறுப்பினர்கள் யாரை நோக்கி விரலை நீட்டுகின்றனரோ அவர் தான் அடுத்த முதல்வர் என்பதை அனைவரும் உணர்ந்தால் நல்லது. காலங்கள் மாறும்போது காட்சிகளும் மாறலாம் !

ஒன்றுபடுவோம் ! வெற்றிபெறுவோம் !

ப.செல்லமுத்து (ஊட்டி)
தலைவர்
பெருமாள்புதூர் - 642204

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்




15-07-2010 அன்று பாரதியார் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் பி.எச்.டி பட்டத்தை மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி அவர்களிடமிருந்து பெறுகிறார். உடன் துணைவேந்தர் டாக்டர் சி.சாமிநாதன், மத்திய அரசின் அறிவியல் ஆலோசகர் டாக்டர்வி.கே.சரஸ்வத் ஆகியோர் உள்ளனர்.

டாக்டர் பட்டம் பெற்ற சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖ ❖ ❖ ❖ ❖

# கொங்கு திருமணமாலை

**மணமகன் தேவை**

விளையன் கூட்டம், 26வயது, படிப்பு B.E., M.S., (USA) உயரம் 5 அடி, 11 அங்குலம், சிகப்புநிறம், அமெரிக்காவில் சாப்ட்வேர் இஞ்சினியர். தேவைப்பட்டால் இந்தியா திரும்ப சம்மதம். பூர்வீகம் சேலம், தந்தை MBBS., M.D., சேலத்தில் டாக்டராக உள்ளார். ஒரே பெண். பூரம் நட்சத்திரம், சிம்மராசி, செவ்வாய் இல்லை. 28 முதல் 32 வயதுக்குள் 6 அடி உயரமான, தகுதியான இஞ்சினியர் மாப்பிள்ளை தேவை.

தொடர்புக்கு : **டி.கே.சுப்ரமணியன்**

60, மேகசின் சாலை (பட்ரோடு), பரங்கிமலை, சென்னை - 600 016

போன் : 044-2231144, 9840364348

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகில் உள்ள கொளத்துப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. N.நல்லசாமி-திருமதி உமா தம்பதியரின் மகனும், அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியில் துணை இயக்குநராகப் பணியாற்றி ஒய்வு பெற்ற திரு. N.இராமசாமி அவர்களின் பேரனுமாகிய செல்வன் N.நிகேஷ் தற்போது திருவள்ளூர் மாவட்டம், சூரப்பேட்டையில் உள்ள வேலம்மாள் மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறான். திருவள்ளூர் மாவட்ட கிரிக்கட் அணியில் தேர்வுபெற்று விளையாடி வருகிறான். கடந்த சில தினங்களாக நடந்த மாநில அளவிலான, மாவட்டங்களுக்கு இடையிலான அனைத்துப்போட்டிகளிலும் இந்த அணி வென்று மாநில அளவில் முதலிடம் பெற்று, பி.ஆர்.தேவர் கோப்பையைப் வென்றுள்ளது.

இந்த திருவள்ளூர் மாவட்ட அணியின் வெற்றிக்கு செல்வன் என்.நிகேஷ் முக்கியக் காரணமாக இருந்துள்ளார் என்பது பெருமைக்குரிய செய்தி. Batting, Bowling இரண்டிலும் அசத்தியுள்ள செய்திகள் The Hindu நாளிதழில் வெளிவந்துள்ளன.

இளம் சாதனையார் செல்வன் முகேஷ், அவரை ஊக்குவித்து வெற்றிக்குத் துணைநிற்கும் பெற்றோர் மற்றும் தாத்தா என்.இராமசாமி ஆகியோருக்கு சென்னை சொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

செல்வன் முகேஷ் வருங்காலத்தில் பெரிய Cricket Player ஆகி சாதனைகள் புரிந்திட சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# விளையாட்டு விழா

08-08-2010 அன்று இராயப்பேட்டை வெஸ்லி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் பட்டியல்

| வ. எண். | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 1. | **ஓட்டப்பந்தயம்**<br>குழந்தைகள்<br>25 மீட்டர் ( LKG & UKG) | ராகுல் கிஷோர்<br>S/o. பெரியசாமி | சக்திவேல்<br>S/o. சுப்ரமணி | தருண் பழனிவேல்<br>S/o. சீனிவாஸ் |
| 2. | மாணவர்கள்<br>25 மீட்டர் ( 1std & 2std) | பவித்ரன்<br>S/o. பாலசுப்பிரமணி | அகிலன்<br>S/o. செந்தில்வேலவன் | சர்வேஷ்<br>S/o. சக்திவேல்<br>அனிரூத் (IV)<br>S/o. ரவிச்சந்தர் |
| 3. | 50 மீட்டர் ( 3rd & 4th) | நித்தின்<br>S/o. கணேசன் | கிரிஜே<br>S/o. ஜெயவேல் | ஜெயந்த்<br>S/o. முருகன் |
| 4. | 75 மீட்டர் ( Vth & VIth) | தனுஷ்<br>S/o. சுரேஷ் | ரோஹித்<br>S/o. ஜெகதீசன் | சசீதரன்<br>S/o. ராஜேந்திரன் |
| 5. | 100 மீட்டர் ( VIIth & VIIIth) | முரளி<br>S/o. சிவபிரகாஷ் | பிரதீஷ்<br>S/o. தாமோதரசாமி | சனோஜ்<br>S/o. செந்தில்வேலவன் |
| 6. | 100 மீட்டர் ( IX & X) | கதிரவன்<br>S/o. சந்திரசேகரன் | திலக்<br>S/o. சிவசெல்வம் | ஜெயகிரன்<br>S/o. கோவிந்தராஜ் |
| 7. | 100 மீட்டர் (11th & upto 20 yr) | ரகுஷாந்த்<br>S/o. ராமசாமி | தினேஷ்ராஜ்<br>S/o. சரவணன் | வைஷ்ணவ்<br>S/o. பெரியகாளி |
| 10. | 100 மீட்டர் ( 21 to 30 yr) | சூரியநந்தன்<br>S/o. ராஜேந்திரன் | தனசேகர்<br>S/o. நல்லுசாமி | கவின்<br>S/o. நடேசன் |
| 11. | 100 மீட்டர் (31 & 40 yr) | V.தளபதி | R.S.மயில்வாகணன் | G.மோகன்ராஜ் |
| 12. | 100 மீட்டர் (41 & 50 yr) | P.சேகர் | R.முருகவேல் | பாலசுப்பிரமணியம் |
| 13. | 50 மீட்டர் (51 & 60 yr) | சதாசிவம் | நடராஜன் | அன்பழகன் |
| 14. | 50 மீட்டர் (60 & above) | செங்கோடன் | முத்துசாமி | பழனிசாமி |

| வ. எண். | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 1. | **பந்து எறிதல்**<br>ஆண்கள்<br>3rd & 4th | நித்தின்<br>S/o. கணேசன் | கிரிஜே<br>S/o. ஜெயவேல் | சுந்தர்<br>S/o. சிவசெல்வம் |
| 2. | **குண்டு எறிதல்**<br>ஆண்கள்<br>Vth & VIth | தனுஷ்<br>S/o. சுரேஷ் | ரோஹித்<br>S/o. ஜெகதீசன் | சசீதரன்<br>S/o. ராஜேந்திரன் |
| 3. | VIIth & VIIIth | பிரதீஷ்<br>S/o. தாமோதரசாமி | முரளி<br>S/o. சிவபிரகாஷ் | சுகில்<br>S/o. இளங்கோ |
| 4. | IX & X | கதிரவன்<br>S/o. சந்திரசேகரன் | திலக்<br>S/o. சிவசெல்வம் | - |
| 5. | 11th & upto 20 yr | ரகுஷாந்த்<br>S/o. ராமசாமி | தினேஷ்ராஜ்<br>S/o. சரவணன் | நிஷாந்த்<br>S/o. நித்தியானந்தம் |
| 6. | 21 to 30 yr | கந்தகார்த்திக்<br>S/o. ராஜாமணி | தங்கவேல்<br>S/o. சண்முகம் | ராம்மோகன்<br>S/o. சுப்பிரமணியம் |
| 7. | 31 & 40 yr | R.மயில்வாணன் | K.ஜெகநாதன் | V.தளபதி |
| 8. | 41 & 50 yr | R.சிவசெல்வம் | M.ராமசாமி | P.சிவாஜி |
| 9. | 51 & 60 yr | K.ராஜாமணி | P.சதாசிவம் | C. தங்கவேல் |
| 10. | 60 & above | மணி | சிவமலை | K.சுப்பிரமணியம் |
| 1. | **Lucky Corner** Gents<br>21 & above | M.கார்த்திக் | P.சென்னியப்பன் | R.இளங்கோ |
| 2. | **Lucky Corner** Ladies<br>21 & above | திருமதி ஜெயமணி | திருமதி நல்லம்மாள் | திருமதி பானுமதி<br>திருமதி சரஸ்வதி |
| 1. | **ஓட்டப்பந்தயம்** குழந்தைகள்<br>25 மீட்டர் ( LKG & UKG) | நந்தனா<br>D/o. சீனிவாசன் | மிர்துவர்ஷினி<br>D/o. பாலசுப்ரமணி<br>சங்கவிதா (IV)<br>D/o. செந்தில் | மிர்துலா<br>D/o. நித்யபிரகாஷ்<br>நட்சத்திரா (V)<br>D/o. அருண்ராஜா |

| வ. எண். | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 2. | 25 மீட்டர் ( 1std & 2std) | கொற்றவை சிவை<br>D/o. சரவணன் | லஷ்சிதா<br>D/o. சுந்தர்<br>நட்சத்திரா<br>D/o. கதிரவன் | சூர்யா<br>D/o. முருகவேல்<br>ரஞ்சினி<br>D/o. பத்ரிநாதன் |
| 3. | 50 மீட்டர் ( 3rd & 4th) | ஐஸ்வர்யா<br>D/o. இளமுருகன் | ஓவித்தா<br>D/o. பாலசுப்பிரமணியம் | வேதிகா<br>D/o. சேகர் |
| 4. | 75 மீட்டர் ( Vth & VIth) | நர்மதாபிரீதம்<br>D/o. கணேசன் | தீபிகா<br>D/o. தங்கவேல் | சர்னிதா<br>D/o. பாலசுப்பிரமணியம் |
| 5. | 100 மீட்டர் ( VIIth & VIIIth) | ஹரினி<br>D/o. பெரியசாமி | நிக்கிதா<br>D/o. நித்தியானந்தம் | நிலாமாதரி<br>D/o. சரவணன் |
| 6. | பெண்கள்<br>100 மீட்டர் ( IX & X) | அமுதினி<br>D/o. கொங்குவேள் | வினிஷா<br>D/o. ஜெயவேல் | ஐஸ்வர்யா<br>S/o. ஆனந்த் |
| 7. | 100 மீட்டர் ( 11th & 20 yr) | சுமிதா<br>D/o. ராஜாகவுண்டர் | பிரியங்கா<br>D/o. சதாசிவம் | செல்ல கிருத்திகா<br>D/o. ராஜாமணி |
| 8. | 100 மீட்டர் ( 21 to 30 yr) | பத்மபிரியா<br>D/o. சிவசுப்பிரமணியம் | இந்துமதி<br>D/o. வெங்கடேஷ் | கீதா<br>D/o. செந்தில் |
| 9. | 100 மீட்டர் (31 to 40 yr) | Dr. விஜயா சுரேஷ் | சாவித்திரி ஸ்ரீனிவாசன் | கற்பகப்ரியா சிவகுமார்<br>தீபாலட்சுமி மோகன்ராஜ் |
| 10. | 75 மீட்டர் (41 to 50 yr) | திலகவதி நடேசன் | கீதா சிவப்பிரகாஷ் | ஜெயமணி குழந்தைவேல் |
| 11. | 50 மீட்டர் (51 to 60 yr) | அமிர்தாமுருகன் | வைரம் | |
| | **பந்து எறிதல்**<br>பெண்கள் | | | |
| 1. | 3rd & 4th | ஓவிதா | ஐஸ்வர்யா | வேதிகா |
| 2. | Vth & VIth | நர்மதா ப்ரீதம்<br>D/o. கணேசன் | அக்ஷயா<br>D/o. செந்தில்குமார் | ரபியா<br>D/o. இசையழகன் |
| 3. | VIIth & VIIIth | ஞானதீபிகா<br>D/o. முருகவேல் | சௌரூபா<br>D/o. ஈஸ்வரன் | ஹரிணி<br>D/o. பெரியசாமி |
| 4. | IX & X | வினிஷா<br>D/o. ஜெயவேல் | ஐஸ்வர்யா<br>D/o. ஆனந்த் | அமுதினி<br>D/o. கொங்குவேள் |
| 5. | 11th upto 20 yr | பிரியங்கா<br>D/o. சதாசிவம் | செல்லகிருத்திகா<br>D/o. ராஜாமணி | சுமிதா<br>D/o. ராஜாகவுண்டர் |

| வ. எண். | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 6. | 21 to 30 yr | பத்மபிரியா | ரோஷினி | இந்துமதி |
| 7. | 31 to 40 yr | Dr.விஜயா | சுதா | சவிதாஸ்ரீனிவாசன் |
| 8. | 41 to 50 yr | தமிழரசி | திலகவதி நடேசன் | ஜெயமணி |
| 9. | 51 to 60 yr | சரோஜா | மணிமேகலைபுஷ்பராஜ் | சரஸ்வதி |
| 10. | 60 to above | உத்தமிபொன்னுசாமி | சிவகாமி | சுசீலா பரமகுரு |

## குழந்தைகள் விழா

01-08-2010 அன்று இராயப்பேட்டை வெள்ளி விழா இல்லத்தில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் பட்டியல்

| வ. எண். | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 1. | **ஓவியப்போட்டி**<br>(LKG to 1st Std)<br>சிறப்பு பரிசு<br>ஹரினி<br>D/o.லெனின்குமார் | நட்சத்திரா<br>D/o.அருண்ராஜ் | சக்திவேல்<br>S/o. சுப்பிரமணி | மிருதுலா<br>D/o. நித்தியபிரகாஷ் |
| 2. | 1st Std to 3rd Std | வேதிகா<br>D/o. சேகர் | சஞ்சிவ்<br>S/o. நித்தியபிரகாஷ் | ஐஸ்வர்யா<br>D/o. இளமுருகன்<br>கார்த்திகா<br>D/o. ரவிக்குமார் |
| 3. | 5th to 8th Std | ஸ்ரீஅபிதா<br>D/o. செந்தில்குமார் | அனுஷா<br>D/o. ராஜிவ் | லத்திகா<br>D/o. மோகன்ராஜ் |
| 4. | 8th Std to X Std | அபிகண்ணன்<br>S/o. பெரியசாமி<br>வினிஷா<br>D/o. ஜெயவேல் | மதுமிதா<br>D/o. ரவிச்சந்திரன்<br>அமுதினி<br>D/o. கொங்குவேல் | லத்திகா<br>D/o. வரதராஜன் |
| 1. | **பாட்டுப்போட்டி**<br>5யது வரை | நட்சத்திரா | நந்தனா<br>சங்கவிதா | ராகுல் கிஷோர் |

| வ. எண். | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 2. | 6 to 10 வயது வரை | லத்திகா | சர்வேஷ்<br>ஸ்ரீஅபிதா | கார்த்திகா |
| 3. | 11 வயதிற்குமேல் | அமுதினி | மதுமிதா | அபிகண்ணன் |
| | **மாறுவேடப்போட்டி** | | | |
| 1. | 4 to 6 வயது வரை | ராகுல்கிஷோர் | ஸ்ரீரஞ்சினி | கார்த்திக் |
| 2. | 7 to 8 வயது வரை | நிமிதா | ஜெயந்த் | அனுஷா |
| | **பேச்சுப்போட்டி** | | | |
| 1. | 10 வயதிற்குள் | ஜெயந்த் | ஸ்ரீஅபிதா | சர்வேஷ் |
| 2. | 10 வயதிற்குமேல் | நிலாமாதரி<br>அபிகண்ணன் | ஐஸ்வரியா | நிமிதா |
| | **நடனப்போட்டி** | | | |
| 1. | 10 வயதிற்குள் | நிவாஷினி | வேதிகா | நிமிதா<br>லத்திகா |
| 2. | 10 வயதிற்குமேல் | வினிஷா | ஹரிணி | |
| | **கட்டுரைப்போட்டி** | | | |
| 1. | பள்ளிப்பருவம் | நிலாமாதரி | அபிகண்ணன்<br>யாழினி | ஐஸ்வர்யா<br>நிமிதா |
| | **கவிதைப்போட்டி** | | | |
| 1. | பள்ளிப்பருவம் | ஐஸ்வர்யா | அமுதினி | |
| | கோலப்போட்டி | | | |
| 1. | குழந்தைகள் | ஹரினி | லத்திகா | நிவாஷினி |
| 2. | பெரியவர்கள் | சுமிதா<br>S/o. ராஜாகவுண்டர் | கீதா<br>W/o. செந்தில்குமார்<br>அமிர்தா<br>W/o. முருகன் | சித்ரா<br>W/o. ரவிக்குமார்<br>மேகவர்ணம்<br>W/o. இராசு<br>சுகந்தி<br>W/o. பெரியசாமி |